**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.189/2021**

**16.04.2026**

**D.W.1- பாண்டியன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் எனது அப்பாவின் சுய சம்பாத்திய சொத்துக்கள் ஆகும். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு குடும்பத்திற்கு செலவு செய்தார் என்றால் அவ்வளவு வருமானம் வராது. வானம் பார்த்த பூமியாகும். மேற்படி சொத்துக்கள் வருடத்திற்கு ரூ.50,000 வருமானம் வரும் சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து 2 1/2 சென்டிற்கு பாகம் பிரிக்கப்படாத சொத்து உள்ளது. மேற்படி 2 1/2 சொத்திற்கான சர்வே எண் தெரியாது. வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் அரசு வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது தாயார் ஆடு, மாடுகள் வைத்து அதன்மூலம் வருமானம் ஈட்டினார். மேற்படி விவரங்களை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது பின்யோசனை செய்து எனது தாயார் வருமானம் ஈட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை தாவா சொத்துக்களின் மூலம் வந்த வருமானத்தை கொண்டு எனது தாயார் பெயரில் சர்வே எண்.259/8, 259/9, 259/10, 259/11 ஆகிய நிலங்களை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை எனது தந்தை அவருக்குரிய பட்டா நிலத்துடன் சேர்த்து கூட்டுக்குடும்பமாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்பமாக தான் எல்லா சொத்துக்களையும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாய், தந்தையார் உயிருடன்

இருக்கும்போது 23.05.2004ம் தேதி என் தந்தைக்குரிய வழக்கு சொத்தினை நானும், எனது சகோதரர்கள் வாதியுடன் பாகமாக பெற்றுக்கொள்ளவும், எனது தாயாருக்குரிய சீமானுத்து கிராமத்தில் உள்ள சர்வே எண்.259/8, 259/9, 259/10, 259/11 ஆகிய நிலங்களை 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மகள்கள் என்ற முறையில் பாகமாக பிரித்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதியும் ஒரு பாகத்தை வாங்கியிருக்கிறார். வழக்கு சொத்தை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1/7 பாகம் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் முழுவதும் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும் அதனால் தான் வாதி 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு 1/7 பாகம் தான் உரிமையுள்ளது. வழக்கு சொத்தில் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லாத நிலையில் 1ம் அயிட்ட சொத்தில் வில்லங்கம் செய்ய வேண்டுமென்பதற்காக எனது பங்கையும், 3 முதல் 6 பிரதிவாதிகளின் பாகத்தையும் சேர்த்து தலா 7ல் ஒரு பாகமாக எனது மனைவி 7ம் பிரதிவாதிக்கு பதிவு கிரையம் எழுதிக்கொடுத்தேன் என்றால் நல்ல எண்ணத்தில் தான் எழுதிக்கொடுத்தேன். மேற்படி கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி நான் எழுதிக்கொடுத்த பிறகு தனியாக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போது எனது அம்மாவுக்கு பாத்தியப்பட்ட வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் இறந்தபின்பு மேற்படி வீட்டை பொது பயன்பாட்டிற்கு வைத்துக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி வீடானது 7 பேர்களுக்கும் உரிமையுள்ளது. மேற்படி வீட்டில் 1ம் பிரதிவாதி தற்போது குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட வீட்டில் குடியிருந்து வருவதால் 3 முதல் 6 பிரதிவாதிகள் பாகம் கேட்கும்போது பிரித்து கொடுப்பதாக சம்மதம் செய்து தான் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி வீடானது பொது பயன்பாட்டிற்காக

பயன்படுத்தி வருவதால் வழக்கு சொத்தாக காண்பிக்கவில்லை என்றால் அது தவறு. வாதியின் வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிப்படையாது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உரிமையுள்ளது, வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா வழக்கில் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-P.S.Ruskin Raj,**

**Sub Judge,**

**Usilampatti.**